# முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு

## O.S.No.93/2018

2026 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 24 ம் தேதியன்று DW.1 ஆக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டத்திலுள்ள பிரிவு (7 ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுந்தரமூர்த்தி | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் வழக்கில் 1 ம் பிரதிவாதி. என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தை படித்துப் பார்த்துதான் நான் அதில் உள்ள விவரங்களை ஒப்புக்கொண்டு என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

என் தரப்பு சான்றாவணங்களாக 1.2.1982 என் தாத்தா முத்துகவுண்டர் எழுதி வைத்த பதிவு செய்யப்படாத அசல் உயில் **பிவாசாஆ** 4. **(வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** முத்துகவுண்டரின் இறப்பு சான்றிதழ் **பிவாசாஆ** 5. ஈரோடு சார்பு நீதிமன்ற அ.வ.எண்.282/87 வழங்கப்பட்ட தீர்ப்புரையின் நகல் **பிவாசாஆ** 6. அதே வழக்கின் தீர்ப்பாணையின் நகல் **பிவாசாஆ** 7. அதே வழக்கின் இறுதி நிலை தீர்ப்பாணையின் நகல் **பிவாசாஆ** 8. 510/87 வழங்கப்பட்ட தீர்ப்புரையின் நகல் **பிவாசாஆ** 9. அதன் பேரில் ஏற்பட்ட மேல்முறையீடு எண் 171/90 வழங்கப்பட்ட தீர்ப்புரையின் நகல் **பிவாசாஆ** 10. சென்னை உயர் நீதி மன்ற SA 1826/91 வழங்கப்பட்ட தீர்ப்புரையின் நகல் **பிவாசாஆ 11**. 10.9.73 ஆர்.சி.பழனியப்பனுக்கு முத்துகவுண்டர் எழுதி வைத்த

கிரைய பத்திரத்தின் நகல் **பிவாசாஆ 12**. 9.6.2006 ஆர் சி பழனியப்பன் எழுதி வைத்த அசல் உயில் **பிவாசாஆ 13 (வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**. பழனியப்பனின் இறப்பு சான்றிதழ் **பிவாசாஆ 14**. AS 167/2001 தீர்ப்பு நகல் **பிவாசாஆ 15**. உச்ச நீதிமன்ற SLP No. 9584/12 தீர்ப்பு நகல் **பிவாசாஆ 16**. மகாலட்சுமிக்கு சின்னப்பகவுண்டர் மற்றும் மூவர் எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் பதிவு நகல் **பிவாசாஆ 17**. ஈரோடு மாவட்ட ஆட்சி தலைவர் பிறப்பித்த உத்தரவு நகல் **பிவாசாஆ 18**. 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ள சிறு விவசாயிக்கான அடையாள அட்டை **பிவாசாஆ 19**. தாவா சொத்துகளுக்கான நில வரி ரசீதுகள் எண்ணிக்கை 9 **பிவாசாஆ 20**. 15.2.2010 ல் 1 ம் பிரதிவாதி ஜெயந்தி எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் பதிவு நகல் **பிவாசாஆ 21** ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன்.